சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 24/2015

பெயர் திரு. முரளிகிருஷ்ணன் நாள். 10.03.2026
த/பெ. ஜெயராமன்

**<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு சொத்தின் புல எண்.34/23. அதன் விஸ்திரனம் 34 செண்ட். வழக்கு சொத்திற்கு கிழக்கே துளசிராமன், தெற்கே கண்ணாயிரம், மேற்கே மகாலட்சுமி, வடக்கே துரைசாமி வகையறா. மேற்கண்ட நான்கு எல்கைகள் உள்ள சொத்துக்களின் புல எண்கள் எனக்கு தெரியாது. கிராம நத்தம் சொத்தின் அசல் பட்டாவை என் வழக்கறிஞறிடம் கொடுத்துள்ளேன். கிராம நத்தத்தில் கொடுக்கப்பட்ட பட்டாவை பார்த்தால் வழக்கு சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என தெரிய வரும் என்று சொன்னால் சரிதான். என் முன்னோர்கள் வழக்கு சொத்தை அனுபவம் செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை.

2. 1994 ல் யார் யாரை விசாரித்து பட்டா கொடுத்தார்கள் என்றால் கிராம நிர்வாக அலுவலர் என்னை விசாரித்து பட்டா கொடுத்தார். கடந்த 25 வருடங்களாக நான் சென்னையில் குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு நான் வழக்கு கிராமத்தில் குடியிருந்தேன். தற்பொழுதும் வழக்கு தாக்கல் செய்யும் காலத்திலும் வழக்கு சொத்து கரம்பாக தான் இருந்தது. 1994 ல் கூரை வீடு வழக்கு சொத்தில் இருந்தது. 1994

முதல் 10 வருடங்கள் நான் வீட்டு வரி செலுத்தியுள்ளேன். அந்த ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வீட்டிற்கு மின் இணைப்பு இல்லை. வழக்கு சொத்தில் நான் கூறும் வீட்டிற்கு எக்காலத்திலும் மின் இணைப்பு கிடையாது.

3. வா.த.சா.ஆ. 3 மற்றும் 4 ஆகியவை சென்ற மாதம் இணையத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டு இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2013 ம் ஆண்டு பிரதிவாதிகள் நான் இடத்தை சுத்தம் செய்யும் பொழுது பிரச்சனை செய்ததால் புகார் அளித்தேன். அதற்கான ஆவணங்களை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். என்ன பிரச்சனை பிரதிவாதிகள் செய்தார்கள் என்றால் சொத்து தங்களுடையது என்று கூறி பிரச்சனை செய்தார்கள். வழக்கு புல எண்ணின் மொத்த விஸ்திரனம் எனக்கு தெரியாது. 1930 ம் வருடம் வெங்கடசாமி என்பவர் வழக்கு சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது.

4. வழக்கு சொத்தை வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் வழக்கு சொத்து என் அனுபவத்தில் உள்ளதால் போட்டு பார்க்கவில்லை. 1940 ல் வெங்கடசாமி வரதனுக்கு வழக்கு சொத்தை குறித்து **அ கு** விடுதலை ஆவணம் எழுது கொடுத்துள்ளேனா என்றால் எனக்கு எதெரியாது. வரதன் வெங்கடலட்சுமி அம்மாளுக்கு உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது. 1949 ல்

வெங்கடலட்சும் அம்மாள் மற்றும் அவரது குடும்பத்தினர் பாகம் பிரித்து கொண்டனர் என்றாலும் அதில் வழக்கு சொத்து வெங்கடலட்சுமி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றாலும் எனக்கு தெரியாது. வெங்கடலட்சுமி மற்றும் துளசி வேதா ஆகியோர் பரிவர்தனை செய்து கொண்டனர் என்றாலும் அதில் ஒரு பகுதி வெங்கலட்சுமிக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னாலும் எனக்கு தெரியாது.

5. வெங்கடலட்சுமி 1971ல் வழக்கு சொத்தை தன் சகோதரி நாகரத்தினத்திற்கு செட்டில்மண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. நாகரத்தினம் வழக்கு சொத்தை பானுமதிக்கு 38 சென்ட்டை கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட விவரங்களை பிரதிவாதிகள் தங்கள் பதிலுரையில் தெரிவித்துள்ளதை நான் தெரிந்து கொள்ளவில்லை. வழக்கு சொத்தை பானுமதிதான் 2008 முதல் அனுபவம் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. நாகரத்தினம் அம்மாள் எனக்கு உறவினர் அல்ல. வழக்கு சொத்து நாகரத்தினம் அம்மாவின் பூர்வீக சொத்துகள் என்று சொன்னால் சரியல்ல. அது எங்களுடைய பூர்வீக சொத்தாகும். வழக்கு சொத்து எங்கள் பூர்வீக சொத்து என்பதற்கு கிரைய ஆவணங்களோ வருவாய் ஆவணங்களோ இல்லை. பட்டா உரிமை ஆவணம் அல்ல என்றாலும் அதை வைத்து நான் வழக்கு சொத்தில் உரிமை கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. 25 வருடங்களுக்கு முன்பு வழக்கு கிராமத்தில் எங்கு இருந்தேன் என்றால் வழக்கு சொத்தில் தான் இருந்தேன்.

6. கடந்த 25 வருடங்களுக்கு முன்பு வழக்கு சொத்தில் நான் குடியிருந்தேன் என்பதற்கு பட்டா ஆவணங்கள் உள்ளது. வழக்கு சொத்தில் நானோ என் முன்னோர்களோ குடியிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு அனுபவம் செய்து இருந்தால் ஆவணங்கள் தாக்கல் செய்து இருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்யும் ஆவணங்கள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை பிரதிவாதிகளிடம் இருந்து அபகரிக்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு அதிகபட்ச செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. துளசிராமன் என் சகோதரர் என்று சொன்னால் சரிதான். அவரும் பட்டாவின் அடிப்படையில் தான் அதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.